**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 291/15 மற்றும் 295/15** **நாள். 30.11.2021**

2021ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | பெரியசாமி | சாதி | |
| கிராமம் | மேல்அத்திபாக்கம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 34 |

**ம.சா.1**

**குறுக்கு விசாரணை**

நான் மேல்அத்திபாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். 06.07.2015 தேதி காலை 9.30 மணிக்கு நான் நீர்பெரும்தகரம் கிராமத்தில் இருந்து வெள்ளிமேடு பேட்டைக்கு செல்லும் போது விபத்து நடந்தது. நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். அந்த இருசக்கர வாகனம் பார்த்திபன் என்பவருக்கு சொந்தமானது. இருசக்கர வாகனத்தை பார்த்திபன் என்பவர் ஓட்டி சென்றார். நானும், முனுசாமி என்பவரும் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து சென்றோம். இருசக்கர வானத்தில் 2 பேர் தான் செல்லமுடியும் என்றாலும், அதை மீறி 3 பேர் சென்றோம் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற பார்த்திபனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. நாங்கள் சென்ற இருசக்கர வாகனம் காப்பீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற வாகனத்திற்கு காப்பீட்டு ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் லேசான வளைவு உள்ளது. வளைவான சாலையில் வேகமாக பார்த்திபன் வண்டியை ஓட்டி சென்றபோது எதிரே டாடா ஏசி வந்ததை பார்த்து பார்த்திபன் பிரேக் அடித்ததால் நாங்கள் சென்ற வண்டி கீழே விழுந்துவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு வலது கால் மூட்டியிலும், இடுப்பிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது. எதிரே வந்த ஆட்டோவின் மூலம் வெள்ளிமேடுபேட்டை மருத்துவமனைக்கு சென்றோம். பின்னர் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கியிருந்து முண்டியம்பாக்கம் அனுப்பிவிட்டார்கள். அங்கு 2 நாட்கள் சிகிச்சை பெற்றேன். பின்னர் நகிரிபுத்தூர் சென்று சிகிச்சை அளித்து கொண்டேன். மருத்துவர்கள் என் காலை எடுக்கவேண்டும் என்று

சொல்லவில்லை என்றாலும், தானாகவே மருத்துவமனையில் இருந்து வந்துவிட்டேன் என்றால்சரியல்ல. கட்டு போட்டு சிகிச்சை பெற்ற பின்பு எலும்பு முறிவு சரியாகிவிட்டது. முனுசாமி என்பவர் விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். முனுசாமி, பார்த்திபனையும் போலிசார் விசாரித்தார்கள். போலிசார் பதிவு செய்த குற்ற வழக்கின் தற்போதை நிலை என்னவென்று தெரியாது. விபத்து நடந்த காலை 9 மணிக்கு அந்த இடத்தில் ஆள் நடமாட்டம் இருந்தது. போலிசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபின்பு அதன் பேரில் புலன் விசாரணை செய்தபோது பார்த்திபனின் கவன குறைவால் தான் விபத்து நடந்தது என்றும், டாடா ஏசி ஓட்டுநர் மீது தவறு இல்லை என்றும் முதல் தகவல் அறிக்கையை முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்களே சென்ற கிழே விழுந்துவிட்டதால் புகார் கொடுக்காமல் இருந்தோம் என்றும், மற்றவர்கள் இழப்பீடு பெறலாம் என்று சொல்லியதன் பேரில் 2 நாட்கள் கழித்து முனுசாமி புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் செய்த தவறுக்காக புகார் கொடுக்க வேண்டாம் என்று 2 நாட்கள் புகார் கொடுக்காமல் இருந்தோம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு 28 வயது. அதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்துள்ளேன். கொத்தனார் செய்தேன் என்பதற்கான ஆதரங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. டாடா ஏசி வானத்தின் பதிவு எண். டி.என் 07 எஆர் 8873 ஆகும். டாடா ஏசி வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பட்டதற்கான அறிக்கை தாக்கல் செய்யவில்லை. டாடா ஏசி ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை. பார்த்திபனின் கவன குறைவால் விபத்து ஏற்பட்டது என்றாலும், டாடா ஏசி வாகனம் எங்கள் மீது மோதவில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் அதனால் தான் முதல் தகவல்அறிக்கை பொய்யானது என்று முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்பதால் அதன் காப்பீட்டு தாரரான 2ம் எதிர்மனுதாரர் நஷ்டயீடு வழங்கவேண்டியதில்லை என்றாலும், நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை அதிகம் என்றாலும், மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 291/15 மற்றும் 295/15** **நாள். 30.11.2021**

2021ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ம் நாள் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முனுசாமி | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஆண்டி | சாதி | |
| கிராமம் | நீர்பெருந்தகரம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 41 |

**ம.சா.2**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-2ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 2 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1.ம.த.சா.ஆ 5-திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவசான்று சான்றிட்ட நகல்.

**குறுக்கு விசாரணை**

ம.சா.1ற்கும் எனக்கும் ஒரே விபத்தில் காயம் ஏற்பட்டது. விபத்தில் எனக்கு வலது கால், இடுப்பில் உள்காயம் ஏற்பட்டது. எலும்பு முறிவு ஏற்படவில்லை. ம.சா.ஆ.5 ஆவணத்தின் படி எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரிதான். விபத்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரால் ஏற்படவில்லை என்றாலும், நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.